Bundesamt
für Migration
und Flüchtlinge

# இன்றிகிறச்சியோன்-சமூக கலாச்சார சரித்திர சட்ட ஒழுங்கையிட்டிய தகவல் பத்திரம்

புதிதாக ஜெர்மன் நாட்டுக்கு குடி வந்த இன்றிகிறச்சியோன் வகுப்பில் கலந்துக்கொள்ள உரிமை பெற்றவர்களுக்கும் இன்றிகிறச்சியோன் வகுப்புக்கு சமூகமளிக்க கடமைப்பட்ட வெளிநாட்டவர்களுக்கும் அதைவிட நீண்ட காலம் ஜேர்மன் நாட்டில் வாழும் இன்றிகிறச்சியோன் வகுப்புக்கு செல்ல வேண்டிய கடமையுள்ள வெளிநாட்டவர்களுக்கும்.

அன்பான ஜெர்மன் நாட்டில் வாழும் வெளிநாட்டவர்களே,

வெளிநாட்டவர் சட்டப்படி உங்களுக்கு ஒரு தடைவ இன்றிகிறச்சியோன் வகுப்பில் கலந்துக்கொள்வதற்கு உரிமை இருந்தாலும் சரி அல்லது இந்த வகுப்பிற்கு கலந்துக்கொள்ள கடமைப்பட்டிருப்பினும் சரி

## இன்றிகிறச்சியோன் வகுப்பு என்றால் என்ன?

இந்த இன்றிகிறச்சியோன் வகுப்பில் பொதுவாக முக்கிய பகுதியாக அதிகூடிய பட்சம் 600 பாடசாலை மணித்தியாலங்கள் மொழி வகுப்பு நடைபெறும். அத்துடன் 45 பாடசாலை மணித்தியாலங்கள் அடங்கிய ஜெர்மன் சமூக கலாச்சார மொழி சரித்திர சட்ட ஒழுங்கை வழிநடத்தும் வகுப்பு வழங்கப்படும். மொழி கற்பிக்கும் வகுப்பு படி பல அத்தியாயமாக பிரிக்கப்படும். ஒவ்வொரு அத்தியாயத்திலும் 100 மணித்தியாலங்கள் என்று பிரிக்கப்பட்டுள்ளது. இதில் முதல் 300 பாடசாலை மணித்தியால வகுப்புக்கள் அடிப்படை மொழி வகுப்புக்களும், இதைத் தொடர்ந்து 300 மணித்தியாலங்கள் உயர் தர மொழி வகுப்புக்களும் நடைபெறும்.

மொழியை கற்பிக்கும் வகுப்பில் உங்களது நாளாந்த வாழ்க்கையில் பேசுவதற்கும் எழுதுவதற்கும் தேவையான சொற்களை கற்பிக்கப்படும். இவ்வேளையில் காரியாலயத்துடன் தொடர்பு கொள்கையில் அல்லது உங்களது அயல் வீட்டாருடன் கதைப்பதற்கு தேவையான மொழியையோ அல்லது உங்களுடன் தொழில் புரிபவருடன் கதைப்பதற்கோ அல்லது கடிதம் எழுதுவதற்கோ அல்லது விண்ணப்பங்களை நிரப்புவதற்கு, தேவையானதை பூர்த்தி செய்யும் அளவிற்கு மொழி கற்பிக்கப்படும்.

உங்களுக்கு இந்த வழி நடத்தும் வகுப்பில் ஜெர்மன் வாழ்க்கை கலாச்சாரம் சம்பந்தமான விடையத்தில் தகவல்களையும் சட்டத்தையுமிட்டிய தகவல்களையும், கலாச்சார நவீனகால சரித்திர சம்பந்தமான விடையத்தையிட்டியும் கற்பிக்கப்படும்.

இதைவிட விசேட இன்றிகிறச்சியோன் வகுப்புக்கள் உதாரணமாக எழுத வாசிக்க முடியாத பெண்களுக்கும் பெற்றோர்களுக்கும் இளைஞர்களுக்கும் மற்றயவர்களுக்கும் வழங்கப்படும். இந்த வகுப்புக்கான நேரம் 945 பாடசாலை மணித்தியாலங்களாகும். நீங்கள் விரைவில் ஜேர்மன் மொழியை கற்றுக்கொள்வீர்களானால் இப்பாடத்தை விரைவான வகுப்பில் கற்றுக்கொள்ளலாம். இதை நீங்கள் இவ்வகுப்பில் 430 பாடசாலை மணித்தியாங்களில் கற்றுக்கொள்ளலாம்.

நீங்கள் எந்த அத்தியாயத்தில் இருந்து தொடங்கவேண்டும் என்பதை உங்களது பாடசாலை வகுப்பு தொடங்கும் முன்னர் ஒரு பரீட்சை மூலம் முடிவு செய்துக்கொள்ளலாம்.

## இறுதி பரீட்சையில் கலந்துக்கொள்வது

இந்த வகுப்பு முற்றுபெறும் வேளையில் இரண்டு வித்தியாசமான பரீட்சைகள் நடத்தப்படும். ஒரு பகுதியில் ஜெர்மன் மொழிக்கான பரீட்சை, இப்பரீட்சையில் நீங்கள் போதிய அளவு ஜேர்மன் மொழியை கற்றுக்கொண்டதாக நிருப்பிப்பிர்களானாலும் அத்துடன் கலாச்சார சட்ட போன்றவையையிட்டிய வழிநடத்தும் வகுப்பிலும்

KNr. 630.036b BAMF 02/2009 Tamil

சித்தியடைவீர்களானால் இன்றிகிறச்சியோன் வகுப்பை வெற்றிகரமாக முடிவுக்கு கொண்டு வருகிறீர்கள். அத்துடன் இதற்காக இன்றிகிறச்சியோன் வகுப்புக்கான சான்றிதழையும் "Zertifikat Integrationskurs" பெற்றுக்கொள்வீர்கள்.

இந்த வகுப்பில் நீங்கள் சித்தியடையாத பட்சத்தில் உங்களுக்கு, நீங்கள் இவ்வகுப்பில் பெற்ற பெறுபேறுகளை அத்தாட்சிப் படுத்தி ஒரு படிவம் தரப்படும்.

இறுதி பரீட்சைக்கு கலந்துக்கொள்வதற்கு பணம் செலுத்த தேவையில்லை.

## இந்த இன்றிகிறச்சியோன் வகுப்பில் கலங்துக் கொள்வதால் நீங்கள் பெறும் நன்மை

ஐரோப்பிய நாட்டைத் தவிர்ந்த வெளிநாட்டவர்கள் ஜெர்மன் நாட்டில் காலவரையரையற்ற வதிவிட(விசா) பெறுவதாயின் ஒரு சில நிபந்தனைகளை பூர்த்தி செய்யவேண்டும். இதில் அளவிற்கு தேவையான ஜெர்மன் மொழியும், அடிப்படை சட்ட, கலாச்சார, ஜெர்மன் வாழ்க்கையையிட்டிய விடையங்களையும் அறிந்திருக்கவேண்டும் என்பவை அடங்கும். இந்த வகுப்பில் வெற்றிகரமாக நீங்கள் பரீட்சையில் சித்தியடைந்தால் இந்த நிபந்தனையில் ஒன்று பூர்த்தியாகிவிடும். இதைவிட நீங்கள் விரைவில் ஜெர்மன் பிரஜா உரிமை பெற வாய்ப்புக்கள் உண்டு.

இதைவிட இந்த இன்றிகிறச்சியோன் வகுப்பில் பெற்ற மொழி அறிவு ஜேர்மன் நாட்டின் நாளாந்தம் வாழ்க்கையின் தராதரத்தை இலகுவாக்கும். அத்துடன் வேலை வாய்ப்புக்கான நிலையை உயர்த்தும்.

## இன்றிகிறச்சியோன் வகுப்பிற்கு பாடசாலையில் பதிவு செய்தல்

உங்களுக்கு இன்றிகிறச்சியோன் வகுப்பிற்கு செல்ல உரிமை அல்லது கடமை இருப்பின் இதற்காக எழுத்து மூலமாக அனுமதியை (Berechtiungsschein) உங்களது வெளிநாட்டவர் காரியாலயத்தினாலோ அல்லது வேலையில்லா பணம் II தரும் காரியாலயத்தினாலோ வழங்கப்படும். இதே வேளையில் உங்களது வீட்டுக்கு அருகாமையிலுள்ள அனைத்து இன்றிகிறச்சியோன் வகுப்பு நடைபெறும் பாடசாலைகளின் முகவரிகளை அனுப்பி வைக்கும்.

இந்த வகுப்பில் கலந்துக்கொள்ளலாம் என்று கிடைக்கும் அனுமதி பத்திரத்தில் எவ்வளவு காலத்திலிருந்து எவ்வளவு காலம் வரை செல்லுபடியாகும் என குறிக்கப்படும். இந்த செல்லுபடியாகும் நாட்களுக்குள் இவ் இன்றிகிறச்சியோன் வகுப்பொன்றிக்கு பதிவு செய்யப்படவேண்டும். தயவுசெய்து இந்த அனுமதி பத்திரம் கிடைத்தவுடன் இன்றிகிறச்சியோன் வகுப்பு நடைபெறும் பாடசாலையுடன் தொடர்பு கொண்டு இந்த எழுத்து மூலம் கிடைத்த அனுமதி பத்திரத்தை அவர்களிடம் கொடுக்கவேண்டும்.

நீங்கள் இவ்வகுப்பிற்காக பதிவு செய்யும் பாடசாலை, எவ்வளவு காலத்துக்குள் இவ்வகுப்பு தொடங்கப்படும் என்று. கண்டிப்பாக உங்களுக்கு அறிவிக்க வேண்டும். இவ்வகுப்பிற்காக நீங்கள் பதிவு செய்த மூன்று மாதத்திற்குள் இவ்வகுப்பை பாடசாலை தொடங்க வேண்டும். இக்காலத்துக்குள் வகுப்பு தொடங்காத பட்சத்தில் இப்பாடசாலை இதை உங்களுக்கு அறிவிக்க வேண்டும். நீங்கள் சொந்தமாகவே முடிவெடுத்துக்கொள்ளலாம் இதற்கு மேலும் இப்பாடசாலையில் இவ்வகுப்பிற்காக காத்திருப்பதா அல்லது வேறு பாடசாலைக்கு சென்று இவ்வகுப்பிற்காக பதிவு செய்வதா என முடிவெடுக்கலாம். இப்படி முடிவெடுக்கையில் இப்பாடசாலை உங்களுக்கு இவ்வகுப்பில் கலந்துக்கொகள்ளலாம் என்ற அனுமதி பத்திரத்தை திருப்பி தரவேண்டும்.

## இன்றிகிறச்சியோன் வகுப்பிற்கு ஒழுங்காக சமூகமளித்தல்

இந்த இன்றிகிறச்சியோன் வகுப்பின் குறிக்கோளை அடைவதானால் நீங்கள் இவ்வகுப்பிற்கு ஒழுங்காக சமூகமளிக்க வேண்டும். அதன் அர்த்தம், பாடசாலை வகுப்பில் தவறாமல் கலந்துக்கொள்ளுவதுடன் இறுதிப் பரீட்சையிலும் கலந்துக்கொள்ள வேண்டும். இவ்வகுப்பிற்கு செல்வதற்கான போக்குவரத்து செலவையோ அல்லது பின்பு மேலுமொரு தடவை உயர்தர மொழி வகுப்பை மறுபடியும் செய்வதாயின் நீங்கள் இவ்வகுப்பிற்கு ஒழுங்காக சென்றிருந்தால் மட்டுமே (போக்குவரத்து செலவையும் அனுமதியையும்) உங்களுக்கு தரப்படும். உங்கள் விருப்பத்திற்கு இணங்கி உங்களது பாடசாலை, நீங்கள் ஒழுங்காக வகுப்பிற்கு சமூகமளித்ததிற்காக எழுத்து மூலம் அத்தாட்சிப் பத்திரத்தை தரலாம்.

இன்றிகிறச்சியோன் வகுப்புக்கான கட்டணம்

இவ் இன்றிகிறச்சியோன் வகுப்புக்காக நீங்கள் ஒரு பாடசாலை மணித்தியாலத்திற்கு 1 ஒயிறோ படி இப்பாடசாலைக்கு செலுத்த வேண்டும். உங்களால் செலுத்தப்படும் பணம் ஒரு அத்தியாயத்திற்கு 100 மணித்தியாலத்திற்குரிய பணமாகும். அத்துடன் சமூக கலாச்சார சட்ட ஒழுங்கை வழிநடத்தும் வகுப்பிற்காக, வகுப்பு ஆரம்பிப்பதற்கு முன்னரே இக்கட்டணத்தை செலுத்த வேண்டும். நீங்கள் வகுப்பிற்கு சமூகமளிக்காத வேளையில் இதற்காக கட்டிய பணம் திருப்பி தரப்பட மாட்டாது. உங்களுக்கு சொந்த வருமானம் இல்லாத வேளையில் உங்கள் வாழ்க்கை செலவிற்கு பொறுப்பாக உள்ளவர் இப்பணத்தை செலுத்த வேண்டும்.

உங்களது வருமானம் குறைவினால் இவ்வகுப்பிற்கான பணத்தை கட்ட முடியாத வேளையில் கூட்டுமாநில காரியாலயம் இப்பணத்தை நீங்கள் கட்டத்தேவையில்லை என்று தீர்மானமெடுக்கும். இப்பணத்தை மேற் கருதப்பட்டவாறு கட்டமுடியாத வேளையில் எழுத்து மூலம் நகரத்திற்கு பொறுப்பாக உள்ள கூட்டுமாநிலத்திற்கு விண்ணப்பம் அனுப்ப வேண்டும். எது உங்களுக்கு பொறுப்பாக உள்ள கூட்டுமாநிலம் என்று முகவரி பட்டியலை பார்த்து அறிந்துக்கொள்ளலாம். இப்பணத்தை கட்டமுடியாத வேளையில் இதற்கான ஆதாரத்தின் பிரதியொன்றை அனுப்பி வைக்கவும். இவ்விண்ணப்பத்தை ஆகபிந்தியது உங்கள் வகுப்பிற்கான பாடசாலையில் பதிவு செய்யும் போது விண்ணப்பிக்க வேண்டும்.

நீங்கள் வேலையில்லாப் பணம் II பெறுபவீர்களானால், அத்துடன் இக்காரியாலயத்தின் மூலம் இன்றிகிறச்சியோன் வகுப்புக்கு செல்ல வேண்டும் என்று கடமைப்படுத்தப்படும் வேளையில் எதுவித விண்ணப்பமும் இல்லாமலே இப்பணத்தை கட்ட வேண்டும் என்ற விதியிலிருந்து நீக்கப்படுகிறீர்கள். உங்களுக்கு வேலையில்லாப்பணம் II நிறுத்தப்படும் வேளையில் உடனடியாக கூட்டுமாநில காரியாலயத்திற்கு அறிவிக்க வேண்டும்.

கட்டிய பணத்தை திரும்ப பெற்றுக்கொள்ளுதல்

நீங்கள் 08.12.2007க்கு பின்னர் இறுதிப் பரீட்சையில் வெற்றிகரமாக கலந்துக்கொள்வீகளானால் கூட்டுமாநிலம் உங்களுக்கு, நீங்கள் கட்டிய பணத் தொகையின் 50%த்தை திருப்பி தரலாம். ஆனால் முக்கிய விடையம் என்னவென்றால் இவ்வகுப்பிற்கு கலந்துக் கொள்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்ட காலத்திற்கு இடையிலும் இறுதிப் பரீட்சையின் காலத்திற்குகிடையிலும் இரண்டு வருடங்கள் கடந்திருக்காத பட்சத்தில் மட்டுமே இப்பணத்தை திருப்பி தரப்படும். உங்கள் வட்டாரத்திற்கு பொறுப்பாக உள்ள கூட்டுமாநில காரியாலயத்திற்கு இப்பணத்தை திருப்பி தருமாறு விண்ணப்பிக்க வேண்டும்.

போக்குவரத்து செலவுகள்

உங்களுக்கு இப்பாடசாலைக்கான கட்டணத்தை கட்டத் தேவையில்லை என்று அனுமதிக்கப்படும் வேளையில் அல்லது வேலையில்லாப் பணம் II பெறுபவராயின் அவர்களுக்கு அந்த பணத்தை வழங்குவதற்கு பொறுப்பான காரியாலயத்திலிருந்து பாடசாலை வகுப்பிற்கு கலந்துகொள்ளுமாறு கடமைப்படுத்தப்படும் வேளையில் போக்குவரத்து செலவை தரப்படும். வெளிநாட்டுகாரியாலயத்தினால் உங்களை இன்றிகிறச்சியோன் வகுப்பிற்கு போக வேண்டும் என கட்டாயப்படுத்தும் வேளையில் தேவைப்பட்டால் இப்போக்குவரத்து செலவின் ஒரு பகுதியை பெற்றுக்கொள்ளலாம்.

மேற்கருதப்பட்ட செலவுகளை பெறுவதற்கு கூட்டுமாநில காரியாலயத்திற்கு விண்ணப்பம் செய்ய வேண்டும். இவ்விண்ணப்பத்தின் போது இதற்கான காரணங்களையும் குறிப்பிட வேண்டும். ஒழுங்கான முறையில் வகுப்பிற்கு சமூகமளிக்கும் சந்தர்ப்பத்தில் மட்டுமே போக்குவரத்து செலவு வழங்கப்படும்.

உயர்தர மொழி வகுப்பில் மேலுமொருதடவை கலந்தக்கொள்ளல்

நீங்கள் உங்களது மொழிப்பரீட்சையில் போதியளவு மொழியறிவை அத்தாட்சிப்படுத்த முடியாத வேளையில் மேலுமொரு தடவை 300 பாடசாலை மணித்தியாலங்கள் உயர்தர மொழி வகுப்பில் கலந்தக்கொள்ளலாம். ஆனால் இதற்கான முக்கிய நிபந்தனை என்னவென்றால் நீங்கள் இதற்கு முன்னர் ஒழுங்காக வகுப்பிற்கு சென்றதுடன் இறுதிப்பரீட்சையில் கலந்தக்கொண்டிருக்கவும் வேண்டும்.

இவ்வகுப்பில் மேலுமொரு தடவை கலந்தக்கொண்ட பின்னர் செய்யப்படும் பரீட்சைக்கும் பணம் செலுத்த வேண்டியது இல்லை.

நீங்கள் உயர்தர மொழி வகுப்பிற்கு மேலுமொரு தடவை செல்ல விரும்பினால் இதற்காக நீங்கள் கூட்டுமாநில காரியாலயத்திற்கு ஒரு விண்ணப்பத்தை செய்ய வேண்டும்.

<u>நீங்கள் இந்த வகுப்பில் கட்டாயமாக கலந்துக்கொள்ள வேண்டும் என்ற கடமையையிட்டிய தகவல்</u>

வெளிநாட்டவர் கரியாலயம் அல்லது வேலையில்லா பணம் II தருவதற்கு பொறுப்பான காரியாலயம் இந்த வகுப்பிற்கு உங்களை சமூகமளிக்க கடமைப்படுத்தும் வேளையில் நீங்கள் விரைவாக ஒரு இன்றிகிறச்சியோன் வகுப்புக்கு பாடசாலையொன்றில் பதிவு செய்து இவ்வகுப்பிற்கு ஒழுங்காக சமூகமளிக்க வேண்டும்.

இவ்வாறு செய்யாத பட்சத்தில் பின்வரும் விளைவுகள் ஏற்படும்.

- வெளிநாட்டவர்கள் இவர்களது விசாவை நீடிக்கும் வேளையில் பாதகமாக முடிவெடுக்கப்படும்.
- சமூக உதவிப் பணம் பெறும் வேளையில் உங்களுக்கு கிடைக்கும் உதவிகள் குறைக்கப்படலாம்.
- தேவைப்பட்டால் வெளிநாட்டு காரியாலயத்தினால் முழு இன்றிகிறச்சியோன் வகுப்புக்கான பணத்தை ஒரு மணித்தியாலத்திற்கு ஒரு ஒயிறோ படி மொத்த வகுப்புக்கான பணத்தை ஒரே தவனையில் கட்டுமாறு வேண்டுகோள் விடப்படலாம்.
- உங்களுக்கெதிராக குற்றப்பணமும் தீர்க்கப்படலாம்.

நீங்கள் வகுப்புக்கு ஒழுங்காக சமூகமளிக்காத வேளையில், உங்களது பாடசாலை வெளிநாட்டவர் காரியாலயத்திற்கோ அல்லது வேலையில்லாதவர் பணம் II வழங்குவதற்கு பொறுப்பான காரியாலயத்திற்கு கண்டிப்பாக அறிவிக்க வேண்டும்.

<u>மேதிகமாக என்ன உங்களுக்கு தெரிந்திருக்க வேண்டும்</u>

இவ்விண்ணப்பப் பத்திரத்தை வகுப்பு நடைபெறும் பாடசாலையிலும், உங்களது வெளிநாட்டவர் காரியாலயத்திலும் அல்லது உங்கள் வட்டார காரியாலயங்களிலும் பெற்றுக்கொள்ளலாம். இதைவிட இதற்கான விண்ணப்பப் பத்திரத்தை இணையத்தள முகவரி www.integration-in-deutschland.de பெற்றுக்கொள்ளலாம்

குடியகழ்வு அறிவுரை காரியாலய–நிலையத்தினால் இங்கு குடியேறிய முதியோருக்கும் (MEB) இளைஞருக்கும் வழங்கப்படும் வகுப்புக்களை கவனத்தில் எடுத்துக்கொள்ளுங்கள். இந்த அறிவுரை வழங்கும் நிலையம் உங்களது விண்ணப்பத்தை நிரப்புவதற்கும் உங்களது கேள்விகளுக்கான பதிலை தரவும், உங்களது பிரச்சினை விடையத்திற்கான தீர்வை ஆராயவும், உங்களுக்கு பொருத்தமான இன்றிகிறச்சியோன் வகுப்பை தெரிவு செய்வதற்கும் உதவி செய்வார்கள். எங்கு குடியகழ்வு அறிவுரை நிலையமும் இளைஞோர் குடியகழ்வு சேவை நிலையமும் உங்களது வீட்டுக்கு அண்மையில் உள்ளது என்பதை நீங்கள் உங்களது வெளிநாட்டவர் காரியாலயத்தின் மூலமாகவோ அல்லது கூட்டு மாநிலத்தின் வட்டார காரியாலத்தின் மூலமாகவோ அல்லது இணையத்தள முகவரி www.integration-in-deutschland.de மூலமாகவோ அறிந்தக்கொள்ளலாம்.